பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்.691 **நாள்: 18.11.2026**

வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சாலையில் ஏற்பட்டுள்ள பள்ளங்களை சீரமைக்கும் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சாலையில் ஏற்பட்டுள்ள பள்ளங்களை சீரமைக்கும் பணிகள் மாநகராட்சியின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, இன்று (18.11.2026) தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-45க்குட்பட்ட எம்.பி.எம் தெரு சந்திப்பில், பி.வி. காலனி, 18ஆவது தெரு, அண்ணாநகர் மண்டலம், வார்டு-98க்குட்பட்ட அயனாவரம் சாலை, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-129க்குட்பட்ட அபுசாலி சாலை, வளசரவாக்கம் மண்டலம், வார்டு-144க்குட்பட்ட எம்.எம்.டி.எ. காலனி, 23ஆவது, தெரு, வார்டு-153க்குட்பட்ட சக்தி நகர், பிரதான சாலை உள்ளிட்ட பல்வேறு சாலைகளில் ஏற்பட்டுள்ள பள்ளங்களை தார் கலவை மற்றும் சிமெண்ட் கலவை கொண்டு சீர் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பணிகள் தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி.